முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

மாகாணக்கல்வித் திணைக்களம் வடக்கு, மாகாணம்
Provincial Department of Education, Northern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மூன்றாந் தவணைப் பரீட்சை - 2026 யூலை
General Certificate of Education (Adv. Level) 3rd Term Exam – 2026 July

சித்திரக்கலை - I Art	Grade 12	மூன்று மணித்தியாலம் 10 நிமிடங்கள்

❖ **அறிவுறுத்தல்கள்**

சுட்டெண் :.....

- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை எழுதுக.**
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.

  பகுதி I
  - எல்லா வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடையளிக்குக.
  - ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் **இலக்கத்தை** எதிரே உள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

  பகுதி II
  - **மூன்று** உப பகுதிகளைக் கொண்டது.
  - **'அ'** பகுதியில் இருந்து **இரு** வினாவும், **'ஆ'**, **'இ'** பகுதிகளில் தலா **ஒரு** வினா வீதம் தெரிவு செய்து **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.
  - பகுதி I, பகுதி II ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும்	
வினாத்தாள் I	
பகுதி	புள்ளி
I	
II	
மொத்தம்	

பகுதி I

- **1** தொடக்கம் **5** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் மிகப் **பொருத்தமான விடையைத்** தெரிவுசெய்க.

1. அனுராதபுர காலத்தின் மிகச்சிறந்ததொரு நிர்மாணிப்பான அவுக்கண புத்தர் சிலையினால் எடுத்துக்காட்டப்படுவது.
   (1) பல்லவரின் கலைப் பண்புகளாகும்
   (2) குப்தர்களின் கலைப் பண்புகள் ஆகும்
   (3) அமராவதி கலைப் பண்புகள் ஆகும்
   (4) மதுரா கலைப் பண்புகள் ஆகும்
   (5) காந்தாரக் கலைப் பண்புகள் ஆகும் (.....)

2. பொலநறுவையின் கல்விகாரை அல்லது உத்தரராமய,
   (1) கற்குன்று ஒன்றினைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட விகாரை ஆகும்.
   (2) மலைக்குன்றுகளைக் குடைந்து சிலைகள் நிர்மாணிக்கப்பட்டதோர் இடம் ஆகும்.
   (3) நின்ற நிலை, இருந்த நிலை சிலைகளை காணக் கூடியதோரிடம் ஆகும்.
   (4) நிலப்பாறையில் செதுக்கப்பட்ட நான்கு சிலைகளை காணக்கூடியதொரு இடம் ஆகும்.
   (5) பராக்கிரமபாகுவினால் அமைக்கப்பட்ட சிறந்த விகாரையாகும். (.....)

3. சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட பல்வேறு தாய் தெய்வ உருவங்கள்,
   (1) பல்வேறு கற்பாறைகளை பயன்படுத்தி செதுக்கப்பட்டுள்ளன
   (2) களிமண்ணினால் செய்யப்பட்டு சுடப்பட்ட நிர்மாணிப்பாகும்.
   (3) வெண்கலத்தைப் பயன்படுத்தி வார்ப்புச் செய்யப்பட்ட சிலையாகும்
   (4) பகுதி பகுதியாக நிர்மாணிக்கப்பட்டு ஒன்றிணைக்கப்பட்டவையாகும்
   (5) மூட்டற்ற வடிவங்களாக செதுக்கப்பட்ட சிறிய சிலைகள் ஆகும். (.....)

Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

4. 1891 ஆம் ஆண்டு இலங்கை கலைச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம்
   (1) அரூபவாத எண்ணக்கருவை பிரபல்யமடையச் செய்தலாகும்.
   (2) மரபு ரீதியான உள்நாட்டு ஓவியக்கலையை பாதுகாத்தலாகும்.
   (3) அருபரீதியான ஒழுங்கமைப்பு கோட்பாடுகளை அறிமுகப்படுத்தலாகும்.
   (4) கனவடிவ வாதக்கலை நுட்பங்களை அறிமுகப்படுத்தலாகும்
   (5) சாஸ்திராலய யதார்த்தவாத ஓவிய முறையைப் பிரபல்யமடையச் செய்தலாகும்

(.....)

5. 43 குழுவினைச் சேர்ந்த ஒரு கலைஞர்
   (1) ஜோஜ் கீட் ஆவார்.
   (2) ஜே.டி.ஏ பெரேரா ஆவார்.
   (3) திஸ்ஸ ரணசிங்க ஆவார்.
   (4) எச்.ஏ. கருணாரத்ன ஆவார்.
   (5) ஏ.சி. ஜி.எஸ். அமரசேகர ஆவார். (.....)

- **6 - 10 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையை 1 - 9 வரையில் இலக்கமிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவு செய்க.**



1



2



3



4



5



6



7



8



9

6. இவற்றுள் மறுமலர்ச்சிக்கால கலைஞர்களின் படைப்பாகக் கருதப்படும் ஓவியங்கள் எவை?
   (1) 1,5 (2) 3,8 (3) 3,9 (4) 1,7 (5) 1,8 (.....)

7. மனப்பதிவுவாத, பின் மனப்பதிவுவாத ஓவியக்கலைப் படைப்புகளை முறையே குறிப்பது
   (1) 4,3 (2) 6,7 (3) 2,6 (4) 5,8 (5) 3,9 (.....)

8. கலைச்சங்க கலைஞர்களது படைப்புகளைக் குறிப்பது?
   (1) 5,3 (2) 4,5 (3) 6,3 (4) 2,5 (5) 7,8 (.....)


9. கனவடிவவாதக் கலைஞர்களால் படைக்கப்பட்ட ஆக்கங்களைக் குறிப்பது
   (1) 6,8 (2) 3,4 (3) 6,3 (4) 8,7 (5) 5,9 (.....)

10. புராதன நாகரிகமொன்றினைச் சேர்ந்த நிர்மாணிப்பு
    (1) 6 (2) 5 (3) 8 (4) 9 (5) 7 (.....)

முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

- **11-15 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் மிகப் பொருத்தமான விடையை A, B, C, D, E எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் ஓவியங்களிலிருந்து தெரிவுசெய்க.**




A B C D E

11. A எழுத்தால் காட்டப்பட்டுள்ள ஓவியம்,
    (1) அக்ரலிக் வர்ணத்தினால் ஆலயச் சுவரொன்றில் வரையப்பட்ட ராஜா ரவிவர்மாவின் ஓவியமாகும்.
    (2) இயற்பண்புவாத பண்புகளுடைய நீர்வர்ண ஊடகத்தாலான ஜாமினி ரோயின் ஓவியமாகும்.
    (3) தைல வர்ணத்தினால் வரைந்து லித்தோ அச்சுமுறையில் பதிப்பிக்கப்பட்ட ராஜா ரவிவர்மாவின் ஓவியமாகும்.
    (4) தைல வர்ணத்தினால் வரையப்பட்ட பாரதமாதா எனும் அபினீந்திரநாத் தாகூரின் ஓவியமாகும்.
    (5) வீணை வாசிக்கும் இந்தியப் பெண் ஒருவரைச் சித்தரிக்கும் அம்ரிதா சேர்கிலின் ஓவியமாகும். (.....)

12. B எழுத்தினால் காட்டப்பட்டுள்ள ஓவியம் வெளிப்படுத்துவது,
    (1) ஞானம் பெறுவதற்காக புத்தபிரான் யாகம் செய்யும் காட்சியாகும்.
    (2) புத்தபிரான் மகியங்கனைக்கு வருகைதந்து அங்குள்ள இயக்கர்களைக் கட்டுப்படுத்தும் காட்சியாகும்.
    (3) மகியங்கனை தலத்தினை புனிதப்படுத்தவதற்காக புத்தபிரான் தீயை உருவாக்கியுள்ள காட்சியாகும்.
    (4) புத்தபிரான் மகியங்கனைக்கு வருகைதந்து புனித பேழையை ஏற்றுக் கொள்ளும் காட்சியாகும்
    (5) புத்தபிரான் நாகதீபத்துக்கு வருகைதந்து பேய்களை விரட்டும் காட்சியாகும். (.....)

13. C எழுத்தினால் காட்டப்பட்டுள்ள **"நடனமாது"(சந்திரலேகா)** எனப் பெயரிடப்பட்ட ஓவியத்தினை வரைந்தவர்,
    (1) A.C.G.S.அமரசேகரா
    (2) ரியாடர் ராஜபக்ஸ
    (3) டேவிட் பெய்ன்ரர்
    (4) J.D.A.பெரேரா
    (5) ஜோர்ஜ கீட் (.....)

14. D எழுத்தினால் காட்டப்படும் சித்திரம் குறிப்பது
    (1) ஆதி மனிதர்களால் லாஸ்கோ குகைச் சுவர்களில் வரையப்பட்ட குதிரையின் உருவமாகும்.
    (2) வரலாற்றுக்கு முற்பட்டகாலத்து அல்ராமீரா குகைச்சித்திரமாகும்
    (3) ஐரோப்பாவிலுள்ள பொண்டிகோமே குகைச்சுவரில் ஆதிமனிதரால் வரையப்பட்ட சித்திரமாகும்.
    (4) ஷுவெட் குகைச்சுவரில் வரையப்பட்ட காளையின் சித்திரமாகும்.
    (5) தந்திரிமலை குகைச்சுவரில் வரையப்பட்ட குதிரையின் சித்திரமாகும். (.....)

15. E எழுத்தால் காட்டப்பட்டுள்ள ஓவியமானது,
    (1) கண்டிக் காலத்துக்குரிய கரகம்பிட்டிய விகாரையில் வரையப்பட்ட இசையும்களிப்பும் எனும் ஓவியமாகும்.
    (2) பொலநறுவைக் காலத்துக்குரிய திவங்க சிலைமனையில் வரையப்பட்ட நடனமாதரின் ஓவியமாகும்.
    (3) தாழ்நில விகாரையொன்றில் வரையப்பட்ட சித்தார்த்தர் பிறப்பு எனும் ஓவியத்தின் பகுதியாகும்.
    (4) ரேகைகளின் செல்வாக்கு அதிகம் காணப்படும் தெகல்தொறுவா ஓவியமாகும்.
    (5) கண்டிக்கால சுதேசிய ஓவியப் பாணியில் ஐரோப்பிய பண்புகள் கலந்தமைக்கு உதாரணமான கத்தளுவ விகாரையின் ஓவியமாகும்.

(.....)

PAST PAPERS

முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

- **16** தொடக்கம் **20** வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை F,G,H,I,J** எனப் பெயரிடப்பட்டுள்ள செதுக்கல்களைக் கொண்ட பின்வரும் படங்களிலிருந்து தெரிவுசெய்க.


F


G


H


I


J

16. F எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிந்துவெளி முத்திரையினால் சிந்தரிக்கப்படுபவர்.
(1) திரிசூலம் ஒன்றைக் கொண்ட கிரீடம் அணிந்த பூசகராவார்.
(2) கொம்புகளைக் கொண்ட கிரீடம் அணிந்த வனதேவதையாகும்.
(3) யோகாசன நிலையில் உள்ள யோகியாவார்.
(4) வனத்திற்கும் பிராணிகளுக்கும் அதிபதியான கடவுளாவார்.
(5) கொம்புகளைக் கொண்ட கிரீடம் அணிந்த பசுபதியாவார் (.....)

17. G எழுத்தினால் காட்டப்பட்டுள்ள செதுக்கல் வேலைப்பாடு
(1) பாரூத் கல்வேலிச் சுவர் உச்சிக்கல்லின் செதுக்கலாகும்.
(2) பாரூத் கல்வேலித் தூணின் மீது செதுக்கப்பட்ட செதுக்கலாகும்.
(3) பாரூத் சைத்திய இடிபாடுகளுக்கிடையில் கண்டெடுக்கபட்டதாகும்.
(4) பாரூத் வாயில் தோரணத்தில் மீது பொருத்தப்பட்டிருந்ததாகும்.
(5) பாரூத் சைத்தியச் சுவரில் பயன்படுத்தப்பட்டிருக்கும் செதுக்கலாகும் (.....)

18. H செதுக்கலிலுள்ள உன்னதமான எளிமையான மற்றும் நீளமான வடிவங்களின் காரணமாக இது
(1) நாயக்க கலை மரபின் செல்வாக்கிற்குட்பட்ட நிருமாணமாகும்
(2) குப்த காலைச் செல்வாக்குடனான நிருமாணமாகும்
(3) கபில முனிவரை சித்தரிப்பது எனக் கூறப்படுகிறது.
(4) மழைக்கதிபதி வருணனின் தெய்வீக எண்ணக்கருவை வெளிப்படுத்துகிறது.
(5) இராணுவ வீரனை சிந்திப்பது எனக் கருதப்படுகின்றது. (.....)

19. J எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சந்திரவட்டக்கல்
(1) அனுராதபுர செதுக்கல் கலைஞரின் திறனைச் சிந்திரிக்கும் நிர்மாணிப்பாகும்
(2) பொலன்னறுவைக் கலைஞரின் பேராற்றலின் மகிமையை எடுத்துக்காட்டும் செதுக்கலாகும்.
(3) எண்ணக்கருரீதியாக செதுக்கப்பட்ட மென்புடைப்புடைய பலகைச் செதுக்கலாகும்.
(4) பௌத்த சமயத்தில் விவரிக்கப்படும் மறுபிறவி பற்றிச் சிந்திருப்பதற்கு எடுக்கப்பட்டதொடு முயற்சியாகும்.
(5) படிக்கட்டொன்றின் அடிப்பகுதியில் இடப்பட்டுள்ள செதுக்கல் செய்யப்பட்ட பலகையாகும். (.....)

20. J எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது.
(1) பாரா அரசர்களின் போர்க்காட்சிகளை உள்ளடக்கிய பளிங்கிலான கற்றகடாகும்.
(2) மெண்ட்குரே அரசன் எதிரிகளுடன் யுத்தம் செய்கின்றமையை காட்டுகின்ற செதுக்கலாகும்.
(3) நாமர் அரசனின் போர் வெற்றிகள் குறியீட்டுப் பாணியில் காட்டப்படுகின்ற செதுக்கல் கற்றகடாகும.
(4) காப்ரே அரசனின் வாழ்க்கைத் தகவல்களை உள்ளடக்கிய செதுக்கல கற்றகடாகும்.
(5) கோரஸ் கடவுளால் செய்யப்படுகின்ற யுத்தக்காட்சிகளை உள்ளடக்கிய செதுக்கலாகும். (.....)

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

- 21 தொடக்கம் 25 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் **மிகப் பொருத்தமான விடையை** பின்வரும் **K,L,M,N,O** எனப் பெயரிடப்பட்டுள்ள பின்வரும் கலைப் படைப்புக்களிலிருந்து தெரிவுசெய்க.


K


L


M


N


O

21. **K** எழுத்தினால் சித்திரிக்கப்படும் செதுக்கலானது,
(1) சாரணாத் தூணிலுள்ள போதிகைச் செதுக்கலாகும்.
(2) சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்ட ரெரக்கொட்டா சிலையாகும்.
(3) பதீராவிலுள்ள தூணில் பொருத்தப்பட்ட போதிகைச் செதுக்கலாகும்.
(4) ரோமானிய வெற்றி வளைவொன்றிலுள்ள சிங்க உருவ செதுக்கலாகும்.
(5) ராம்பூர்வாவிலுள்ள தூணில் பொருத்தப்பட்ட போதிகைச் செதுக்கலாகும்.

(.....)

22. **L** எழுத்தினால் குறிப்பிடப்படும் இச்சிலை
(1) ஆன்மீகப் பண்புகளைச் சித்திரிக்கும் கல்விகாரையிலுள்ள புத்தர் சிலையாகும்.
(2) பொலன்னறுவையில் காணப்படும் விசேட பண்புகளைக் கொண்ட புத்தர் சிலையாகும்.
(3) கல்விகாரைச் சிலைகளில் காணத்தக்க பண்புகளை எடுத்துக்காட்டும் புத்தர் சிலையாகும்.
(4) அனுராதபுர சமாதி புத்தர் சிலையைத் தழுவிய பொலன்னறுவை வட்டதாகே புத்தர் சிலையாகும்.
(5) தலைமுடியும் ஆடையமைப்பும் எளிமையாகக் கொண்ட பொலன்னறுவை புத்தர் சிலையாகும் (.....)

23. **M** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிலைகளின் தொகுதி.
(1) சிவனும் பார்வதியும் நாயனாரொருவருடன் இருப்பதைச் சித்தரிக்கும் இந்துசமய உலோகச் சிலையாகும்.
(2) சிவன், பார்வதி ஆகியோரைச் சித்தரிக்கும் சோமஸ்கந்தர் எனும் சிலையாகும்.
(3) மலைக்குமரனையும் பரிவாரங்களையும் கொண்ட இந்துசமயக் கதையொன்றைச் சித்திரிப்பதாகும்.
(4) திருமால், லட்சுமி ஆகியோரைச் சித்தரிக்கும் உலோகச் சிலையாகும்.
(5) சிவன், பார்வதி திருமணக் காட்சியை சித்தரிக்கும் மணவாள கோலச் சிலையாகும். (.....)

24 **N** எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது,
(1) கடினச் செயலை விழுமிய ரீதியாகவும், பௌதிகரீதியாகவும் எடுத்துக்காட்டும் படைப்பாகும்.
(2) குப்த கலைஞரின் ஊடகப் பயன்பாட்டையும் கலைத்திறனையும் வெளிப்படுத்தும் சிறந்த உதாரணமாகும்.
(3) போதிசத்துவரின் கடினச் செயலை யதார்த்தபூர்வமாகச் சித்திரிப்பதற்கு காந்தாரக் கலைஞர் மேற்கொண்டதொரு முயற்சியாகும்.
(4) பௌத்த இலக்கியத்தில் விவரிக்கப்படும் கடினச் செயலினை மதுராக் கலைஞர் யதார்த்தபூர்வமாகச் சித்திரித்துள்ளமையாகும்.
(5) புத்தபிரானின் மெலிந்த உடலின் தன்மையை கல்லினாலான ஊடகத்தில் சித்திரிக்கும் இந்தியச் சிலையாகும். (.....)

25. **O** எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பரிதிவட்டம் எறிபவரின் சிலை.
(1) கிரேக்க கெலனிஸ்டிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட உன்னதமானதொரு படைப்பாகும்.
(2) செயற்றிறனான மனித உருவங்களை ஆக்குவதில் திறமையாளரான பிரக்சி டெலஸ்சின் நிர்மாணிப்பாகும்.
(3) கிரேக்க விளையாட்டு வீரரொருவரைச் சிலையாக வடிப்பதற்கு பொலிக்லீடர்சினின் முயற்சியாகும்.
(4) செயற்றிறனான அசையும் கொண்ணிலையொன்று சித்திரிக்கப்பட்டுள்ள பீடியஸ்சின் சிலையாகும்.
(5) வெண்பளிங்கு ஊடகத்தில் விளையாட்டு வீரரொருவரைச் சித்தரித்துள்ள மைரனின் நிர்மாணிப்பாகும்.

(.....)

Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

- **26 தொடக்கம் 30 வரையான ஒவ்வொரு வினாவிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

26. ஆகாய தூரநோக்கு என்பது
(1) கடலின் ஆழப்பகுதியில் உள்ள கப்பலில் இருந்து தெரியும் தூரக்காட்சி
(2) கீழிருந்து மலையில் உச்சியில் தெரியும் தூரக்காட்சி
(3) புகையிரதத் தண்டவாளத்தை நோக்கும்போது தெரியும் தூரக்காட்சி
(4) தாழ்வாக பறக்கும் விமானத்தில் இருந்து கீழ்நோக்கி தெரியும் தூரக்காட்சி
(5) படுத்திருந்து ஆகாயத்தை பார்க்கும்போது தெரியும் தூரக்காட்சி (.....)

27. கட்புலக் கலையின் மனப்பதிவு வாதச் சித்தரிப்பு (Impressionism) என்பது
(1) தூரதரிசனக் கோட்பாடுகளைச் சரியாகப் பயன்படுத்துதலாகும்.
(2) இயற்கையில் காணப்படும் உயிருள்ள, உயிரற்றவற்றின் பண்புகளை உள்ளவாறே சித்தரித்தலாகும்.
(3) சாஸ்திரத்தின் அடிப்படை விதிகளைப் பின்பற்றுதலாகும்.
(4) விருத்தியுற்ற அழகியல் கோட்பாடுகளுக்கமைய மனித உருவங்களைச் சித்திரித்தலாகும்.
(5) தெளிவாகக் காணக்கூடிய தூரிகையின் வேகமான தடங்கள், இயற்கை ஒளியையும் இயற்கை உலகையும் கருப்பொருளாகக் கொண்டிருத்தல். (.....)

28. ஐரோப்பாவின் வரலாற்றுக்கு முற்பட்டகால குகை ஓவியங்களின் சிறப்பியல்பு
(1) பூரணமற்ற பரும்படிக் குறிப்புகள் வரையப்பட்டிருத்தம்.
(2) இயற்கைப் பிரமாணங்களில் விலங்குகள் வரையப்பட்டிருத்தல்
(3) விலங்குகளின் உயிர்ப்பான அசைவுத்தோற்ற மெய் நிலைகள் வரையப்பட்டிருத்தல்.
(4) மமத் யானை உருவங்கள் பரவலாக வரையப்பட்டிருத்தல்.
(5) மரணித்த விலங்குகளின் உருவங்கள் பரவலாக வரையப்பட்டிருத்தல் (.....)

29. அச்சிடலுக்காக பரவல் அலங்காரமொன்றை நிர்மாணிக்கும்போது மிக முக்கியமானதாய் அமைவது
(1) எளிய வடிவங்களையும் வரையறுக்கப்பட்ட வர்ணங்களையும் பயன்படுத்துதலாகும்.
(2) வரையப்பட்ட அலங்காரப் பகுதியை, ஏனைய பகுதிகளுடன் சகல பக்கங்களிலும் தொடர்புபடுத்துதலாகும்.
(3) ஆக்கபூர்வமான வடிவங்களின் பயன்பாடும் மனங்கவர் வர்ணங்களைப் பயன்படுத்துதலுமாகும்.
(4) சமவளவான பல்வேறு அலகுகளினால் முழுப் பரப்பையும் நிரப்பும் வீதத்தில் வரைதலாகும்.
(5) பயன்படுத்திய வடிவங்களில் குளிர், வெப்ப வர்ணங்களைப் பொருத்தமானவாறு பயன்படுத்துதலாகும்.
(.....)

30. கட்புலக் கலையின் யதார்த்தச் சித்திரிப்பு (Realism) என்பது,
(1) சாஸ்திராலய அடிப்படை விதிகளைப் பின்பற்றுதலாகும்.
(2) தூரதரிசனக் கோட்பாடுகளைச் சரியாகப் பயன்படுத்துதலாகும்.
(3) விருத்தியுற்ற அழகியல் கோட்பாடுகளுக்கமைய மனித உருவங்களைச் சித்திரித்தலாகும்.
(4) இயற்கையில் காணப்படும் உயிருள்ள, உயிரற்றவற்றின் பண்புகளை உள்ளவாறே சித்திரித்தலாகும்.
(5) அழகியல் கோட்பாடுகளுக்கமைய அனைத்தையும் சித்திரித்தலாகும். (.....)


- **31 தொடக்கம் 35 வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப் பொருத்தமான விடையை அதற்கு முன்னாலுள்ள கலை நிர்மாணிப்புகளின் உருவப் படங்களை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்க.**

31. இங்கு காட்டப்பட்டுள்ள கட்டிட அமைப்பானது
(1) அமராவதி தூபியிலுள்ள தோரணச் செதுக்கலாகும்.
(2) சாஞ்சி தூபியுடன் இணைந்த தோரணச் செதுக்கலாகும்.
(3) எல்லோராவிலுள்ள வாயில் தோரணமாகும்.
(4) பாரூத்தில் அமைக்கப்பட்டிருந்த கல்லாலான தோரணமாகும்.
(5) ஹரப்பாவில் கண்டெடுக்கப்பட்ட நகர வாயிலின் முகப்புத் தோரணமாகும். (.....)



முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

32. இங்கு காட்டப்பட்டுள்ள சிறப்பான கட்டடக்கலை அம்சமானது.



(1) பாண்டிய கட்டிடக்கலைப்பண்புகளைக் கொண்ட முதலாம் சிவாலயமாகும்.
(2) முற்றிலும் கருங்கல்லினால் அமைக்கப்பட்ட பொன்னம்பலவாணேஸ்வரம் ஆகும்.
(3) வானவன் மாதேவி ஈசுரமுடையார் என்ற சிறப்புப்பெயரைக் கொண்ட 2ம் சிவாலயமாகும்.
(4) திரிகோணமலையில் அமைந்துள்ள கோணேஸ்வரர் ஆலயம் ஆகும்.
(5) பொலநறுவை காலத்துக்குரிய திவங்க சிலைமனையாகும். (.....)

33. அருகில் காட்டபப்ட்டுள்ள கட்டிடக்கலை நிர்மாணிப்பானது.



(1) அரச குடும்பத்தினருக்காக அமைக்கப்பட்ட சிகிரியாக் குளமாகும்.
(2) பொலநறுவையிலுள்ள குமாரக் குளமாகும்.
(3) ரண்மசுப் பூங்காவில் அமைக்கப்பட்ட குளமாகும்..
(4) ஹரப்பா நகரில் கண்டறியப்பட்ட பொது நீராடல் குளமாகும்.
(5) அநுரதபுரத்திலுள்ள இரட்டைக் குளமாகும். (.....)

34. அருகில் காட்டப்பட்டுள்ள பாதினன் தேவாலயத்தில் பயன்படுத்தப்பட்ட தூண் அமைப்பு



(1) அலங்கார அழகுமிக்க கொரிந்தியன் தூண்களாகும்
(2) கி.மு 430 க்கு பின்னர் பரவலாகப் பயன்படுத்தப்பட்ட அயோனிக் தூண்களாகும்
(3) செதுக்கல்கள எதுவுமற்ற பழமையான தூண்களாகும்.
(4) அகன்ற அடிப்பகுதியும் உச்சியில் போதிகையும் கொண்ட மரத் தூண்களாகும்.
(5) கி.மு 600 முதலே பயன்பாட்டுக்கு வந்திருந்த டொரிக் தூண்களாகும்.

(.....)

35. அருகில் காட்டப்பட்டுள்ள கட்டடப் பகுதி,



(1) பொலநறுவையில் கணடெடுக்கப்பட்ட வட்டதாகே ஒன்றின் எச்சமாகும்.
(2) மொகஞ்சதாரோ நகரத்தில் அமைக்கப்பட்டிருந்த பொதுக்கிணறு ஒன்றாகும்.
(3) எகிப்தில் காணப்பட்ட கல்லறை ஒன்றின் எச்சமாகும்.
(4) ஹரப்பா நகரத்தில் அமைக்கப்பட்டிருந்த பொதுக்கிணறு ஒன்றாகும்.
(5) சிந்துவெளியில் கண்டறியப்பட்ட ஓட்டுச் சூளையாகும். (.....)

- **வினா இல 36 - 40 வரை கீழே தரப்படும் நிழற்படம் தொடர்பாக கேட்கப்படும் வினாக்களிற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**



36. இவ்வோவியத்தின் படைப்பாளியாக கருதப்படுபவர்,
(1) 20ம் நூற்றாண்டை சேர்ந்த கலைஞர்களுள் சோளியஸ் மெண்டிஸ்
(2) 43ம் குழுவைச் சேர்ந்த கலைஞர்களுள் மஞ்சுஸ்ரீ
(3) 20ம் நூற்றாண்டை சேர்ந்த கலைஞர்களுள் எம்.சாரிலிஸ்
(4) 43ம் குழுவைச் சேர்ந்த கலைஞர்களுள் ஜோர்ச்கீட்
(5) இலங்கைக்கலைச்சங்க கலைஞர்களுள் ஒருவரான டேவிட் பெய்ன்ரர் (.....)

முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

37. இவ் ஓவியத்தின் தொனிப் பொருளாக அமைவது
(1) இந்து மதம் சார்பான புராணக் கதையொன்றாகும்.
(2) யேசுநாதர் வெற்றியுடன் ஜெருசலேமினுள் நுழையும் காட்சியாகும்.
(3) மலைப்பாங்கான சூழலில் யேசுநாதர் சீடர்களுக்கு போதனை செய்யும் காட்சியாகும்.
(4) கிராமப்புற சூழலில் விவசாயிகள் உரையாடும் காட்சிச் சித்தரிப்பாகும்.
(5) கல்வாரி மலைக்கு பக்தர்கள் செல்லும் காட்சியாகும்

(.....)

38. இவ் ஓவியத்தின் ஒழுங்கமைப்பானது
(1) கருப்பொருளுக்கமைவான அனைத்துச் சித்தரிப்புகளும் அழகிய வடிவங்களில் காட்டப்பட்டிருத்தலாகும்
(2) மலைநார்ந்த சூழல் பின்னணியில்யேசுநாதரும் சீடர்களும் தூரதரிசனத் தன்மையுடன் சித்தரிக்கப்பட்டுள்ளனர்
(3) இயல்பான தன்மையில் இருந்து விலகி வரையப்பட்ட மனித உருவங்கள் இருபரிமாணத் தன்மையுடன் சித்தரிக்கப்பட்டுள்ளன.
(4) இயற்கையில் காணப்படுபவற்றின் இயல்பான தன்மையை திரிபுபடுத்தி, கேத்திரகணித வடிவங்களாக முன்வைக்கப்பட்ட படைப்பாகும்.
(5) ஏனைய உருவங்களைவிட பிரதான பாத்திரம் முதன்மைப்படுத்தி பெரிதாக காட்டப்பட்டுள்ளது

(.....)

39. இவ்வோவியம் வரையப்பட்டிருப்பது,
(1) திரினிற்றி தேவாலயத்தின் சுவரில் எண்ணெய் வர்ணத்தினாலாகும்.
(2) கன்வஸ் துணியில் எண்ணெய் வர்ணத்தினாலாகும்.
(3) கடதாசித் தாளின் மீது அக்ரலிக் வர்ணத்தினாலாகும்.
(4) மரப்பலகையில் எண்ணெய் வர்ணத்தினாலாகும்.
(5) கடதாசித் தாளின் மீது நீர் வர்ணத்தினாலாகும். (.....)

40. இவ்வோவியத்தின் மூலம்
(1) தெய்வீகத் தன்மையை பேணும் வகையில் பௌத்த வரலாற்றுச் செய்தியொன்றை உணர்வுபூர்வமாக சித்தரிப்பதில் ஓவியரின் திறன் வெளிப்படுகிறது.
(2) அனைத்துச் சித்தரிப்புகளும் மனதைக்கவரும் வகையில் காட்டப்பட்டிருத்தல் கலைஞரின் திறமைக்குச் சான்றாகும்
(3) மேலைத்தேய கருப்பொருள் ஒன்றினை கீழைத்தேய சுதேசியத் தன்மையுடன் வெளிப்படுத்துவதில் கலைஞர் வெற்றிகண்டுள்ளார்.
(4) நளினமான மனித உருவங்களுக்கு மனங்கவரும் விதத்திலான ஆடையணிகள்மூலம் கருப்பொருளினை முனைப்புறுத்துவதற்கு ஓவியர் முயன்றுள்ளார்.
(5) இயல்காட்சித் தன்மையையும் வெளிப்பாட்டு தன்மையையும் ஒரே ஓவியத்தில் வெளிப்படுத்தியுள்ளார்.

(.....)

முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

பகுதி 'அ'

(சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

1. **இலங்கையில் சோழர் ஆட்சிக்குப் பின் நிர்மாணிக்கப்பட்ட பௌத்த சிலைமனைகள் திராவிடக் கட்டிடக்கலையின் செல்வாக்குகளைப் பெற்றமையை அவதானிக்க முடிகிறது.**

(i) பொலநறுவைக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட பௌத்த சிலைமனைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (2புள்ளிகள்)

(ii) பொலநறுவை 2ம் சிவாலயத்தின் கலைத்துவப் பண்புகளைச் சுருக்கமாக விளக்குக. (5புள்ளிகள்)

(iii) பௌத்த சிலைமனைகளில் அவதானிக்கக்கூடிய திராவிடக் கட்டடக்கலை அம்சங்களை தூபராம சிலைமனை, திவங்க சிலைமனை, ஆகியவற்றினை அடிப்படையாகக் கொண்டு ஒப்பிட்டு ஆராய்க. (8புள்ளிகள்)

2. **அனுராதபுரக் காலத்து சித்திரக்கலை மரபானது பொலநறுவை, கண்டி யுகங்களை நோக்கி பரவிச் சென்றது.**

(i) அநுராதபுரக் காலத்து பௌத்த ஓவியங்கள் காணப்படும் இடங்கள் இரண்டினை குறிப்பிடுக. (2புள்ளிகள்)

(ii) பொலநறுவை திவங்க சிலைமனையில் காணப்படும் "தேவ ஆராதனை" ஓவியம் தொடர்பாக சுருக்கமாக விளக்குக. (5புள்ளிகள்)

(iii) கண்டிக்காலத்தில் மலைநாட்டுச் சித்திரப் பாரம்பரியம், தாழ்நாட்டுச் சித்திரப் பாரம்பரியத்திலிருந்து வேறுபடும் விதத்தினை விளக்குக. (8புள்ளிகள்)

3. **சமய எண்ணக்கருக்களை மேம்படுத்தும் முகமாக வழிபாட்டுத் தலங்களில் சுவர் ஓவியங்கள் வரையும் முறை வளர்ச்சி பெற்றது.**

(i) புதிய களனி விகாரையில் வரையப்பட்டுள்ள புத்த சரிதையை விளக்கும் ஓவியங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (2புள்ளிகள்)

(ii) வல்வெட்டித்துறை முத்துமாரியம்மன் ஆலய விதானத்தில் வரையப்பட்டுள்ள 'சூரசங்காரம்' ஓவியம் பற்றி சுருக்கமாக விளக்குக. (5புள்ளிகள்)

(iii) 'சித்தார்த்தர் திருமணம்' என்ற விடயத்தை எம்.சார்லிஸ் மற்றும் சோமபந்து வித்தியாபதி ஆகியோர் ஓவியமாக வெளிப்படுத்தும் விதத்தினை ஒப்பிட்டு விமர்சிக்குக. (8புள்ளிகள்)

(சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

4. **இந்திய ஓவியங்களில் இராஜா ரவிவர்மா எனும் கலைஞருக்குப் பின் இந்திய ஓவியத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய கலைஞர்களுடைய கலைப் படைப்புக்களும் சிறப்புவாய்ந்தவையாகும்.**

(i) இராஜா ரவிவர்மாவின் ஓவியங்களில் காணப்படும் இந்தியக் கலை மரபினையும் அச்சு முறையினையும் குறிப்பிடுக. (2புள்ளிகள்)

(ii) அபினீந்திரநாத் தாகூரின் நிர்மாணிப்புகளில் ஒன்றான 'பாரத மாதா' ஓவியம் பற்றி சுருக்கமாக விளக்குக. (5புள்ளிகள்)

(iii) இந்திய மறுமலர்ச்சிக்கால கலைப் படைப்பில் "ராதாவின் விரகதாபம்" இந்திய இலக்கிய கருப்பொருளை வெளிப்படுத்தும் "இந்திஜித்தின் வெற்றி" ஆகிய ஓவியங்கள் பற்றி ஒப்பிட்டு ஆராய்க. (8புள்ளிகள்)

முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

5. இந்தியக் காந்தார, மதுராக் கலை நிர்மாணிப்புகளுடன் அமராவதி கலை மரபுகளின் நிர்மாணிப்புகளும் காணப்படுகின்றன.

(i) அமராவதிக் கால கல்வேலி செதுக்கல்கள் இரண்டினைப் பெயரிடுக. (2புள்ளிகள்)

(ii) மதுரா புத்தர் சிலைகளின் பண்புகளை சுருக்கமாக எடுத்துரைக்க. (5புள்ளிகள்)

(iii) மதுரா மரபுக்குரிய கலை நிர்மாணிப்புகள் காந்தாரக் கலை நிர்மாணிப்புக்களுடன் தொடர்ச்சியாக வளர்ச்சிகண்ட விதத்தினை "கத்ரா" புத்தர் சிலை மற்றும் "பிரேகம்" புத்த சிலைகளின் கலைப் பண்புகளை ஒப்பிடுவதன் மூலம் ஆராய்க. (8புள்ளிகள்)

(சித்திரக்கலையின் மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

6. சுயாதீனக் கலைஞரின் புதிய தேடலின் விளைவாக மனப்பதிவு வாதம் மற்றும் பின்மனப்பதிவுவாதம் தோற்றம் பெற்றன.

(i) மனப்பதிவுவாதக் கலைஞர்கள் இருவரை குறிப்பிடுக. (2புள்ளிகள்)

(ii) பின்மனப்பதிவுவாத ஓவியங்களின் கலைப் பண்புகளை சுருக்கமாக விளக்குக. (5புள்ளிகள்)

(iii) வின்சன் வான்கோவின் 'உருளைக் கிழங்கு உண்பவர்கள்', 'நட்சத்திர இரவு' என்னும் இரு கலைப் படைப்பினதும் அடிப்படைப் பண்புகளை ஒப்பிட்டு விமர்சிக்குக. (8புள்ளிகள்)

7. கிரேக்க கட்டிடக்கலையானது எகிப்திய கலைப் பண்புகளை பின்பற்றி வளர்ச்சியடைந்தது.

(i) ஹெலனிஸ்ரிக் காலப்பகுதிக்குரிய கிரேக்க சிற்பங்கள் இரண்டினைப் பெயரிடுக. (2புள்ளிகள்)

(ii) எகிப்திய பிரமிட்டுக்களின் வளர்ச்சிப்படிநிலை பற்றி சுருக்கமாக அறிமுகம் செய்க. (5புள்ளிகள்)

(iii) கிரேக்க மட்பாண்ட ஓவியங்களினதும், எகிப்திய கல்லறை ஓவியங்களினதும் கலைப்பண்புகளை ஒப்பிட்டு ஆராய்க. (8புள்ளிகள்)

முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2026 யூலை

General Certificate of Education (Adv. Level) 3rd Term Exam – 2026 July

சித்திரம் Art	Grade 12	T	II	மூன்று மணித்தியாலம் பத்து நிமிடம்

அறிவுறுத்தல்கள்:

- உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள பொருள் தொகுதியை நன்றாக விளங்கிக் கொள்வதற்கு மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.
- உமது சுட்டெண்ணைச் சித்திரம் வரையும் தாளின் மறுபக்கத்தில் தெளிவாக எழுதுக.
- வர்ணச் சித்திரம் வரைவதற்காக உமக்கு வழங்கப்பட்டுள்ள விசேட வரைதல் தாளைப் (Drawing paper) பயன்படுத்துக. வேறு எந்தவொரு சித்திரத்தையோ பரும்படிக் குறிப்பையோ வரையத் தேவையில்லை.
- விடைத்தாளைப் பரீட்சை மேற்பார்வையாளரிடம் கையளிக்கும்போது அது நன்கு உலர்ந்திருத்தல் முக்கியமானது. ஈரமான சித்திரங்கள் ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொள்வதற்குச் சந்தர்ப்பம் உள்ளமையினால் அது உங்களுக்குப் பாதகமானதாக அமையலாம்.

இயற்கைக் கற்றலும் அசையாப் பொருட் கூட்டமும்

பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொண்டு உமக்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள செடியுடன் கூடிய பொருள் தொகுதியை வரைந்து வர்ணம் தீட்டுக.

- கடதாசிப் பரப்பினை பொருத்தமானவாறு பயன்படுத்திச் சித்திர ஒழுங்கமைப்பினைச் செய்க.
- பொருள்களினதும் செடியினதும் இயல்பு,வெளிப்புறத்தன்மை,பரிமாணம்,கண்மட்டம்,முப்பரிமாண இயல்பு தூரதரிசனக் கோட்பாடுகள் ஆகியன பற்றிக் கவனத்திற் கொள்க.
- பொருள் தொகுதி உமக்குத் தெரிகின்ற விதத்தில் வரைந்து அதன் மீது ஒளி,இருள் விழுகின்ற தன்மையைக் கவனத்திற் கொண்டு வர்ணம் தீட்டுக.
- வர்ண ஊடகங்களைக் கையாளுகின்ற நுட்பமுறைகளைப் பொருத்தமானவாறு பயன்படுத்துக.
- பொருள் தொகுதிக்குப் பொருத்தமான வர்ணப் பின்னணியைப் பயன்படுத்துக.
- பொருள் தொகுதி வைக்கப்பட்டுள்ள பலகையின் அளவைப் பொருள் தொகுதிக்குப் பொருத்தமானதாக மாற்றிக் கொள்ள முடியும்.
- நீர் வர்ணம்,போஸ்டர் வர்ணம்,தூள் வர்ணம்,பஸ்ரல் வர்ணம் அல்லது இவ்வூடகங்களைக் கலந்தும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(100 புள்ளிகள்)

Past Papers Wiki

 முழுப்பதிப்புரிமையுடையது [All Rights Reserved]

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2026 யூலை
General Certificate of Education (Adv. Level) 3rd Term Exam – 2026 July

சித்திரம் Art	Grade 12	T	II	மூன்று மணித்தியாலம் பத்து நிமிடம்

ஆசிரியர்களுக்கு மட்டும் பொருட்கூட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்கான அறிவுறுத்தல்

1. பொருட்கூட்டத்தை ஒழுங்குபடுத்தும் மேசை 73cm உயரமுடையதாக இருக்க வேண்டும்.
2. பொருட்கள் யாவும் கண்மட்டத்திற்கு சற்றுக்கீழாகவும் செடி கண்மட்டத்தில் இருக்குமாறு ஒழுங்குபடுத்துக.
3. ஆதாரப்பலகையினை பொருள் ஒழுங்கிற்கு ஏற்ற அளவில் பொருத்தமாக பயன்படுத்துக.
4. ஒரு பொருட்கூட்டத் தொகுதியினை வரையும் மாணவர்கள் 2.25m இற்கு குறையாத தூரத்திலும், 4m இற்கு மேற்படாத தூரத்திலும் அமர்வதை கருத்தில் கொள்க.

.



தேவையான பொருட்கள்

1. பிஸ்கற்பெட்டி (20x 22x 15) - வெள்ளை டிமைந் தாளினால் சுற்றி ஒட்டிவிடுக.
2. தேங்காய்ப் பாதி
3. கோட்டு வர்ணத்துணி – (½ மீற்றர்)
5. வர்ணக் குரோட்டன் கிளை
6. கண்ணாடிக் குவளை (16cm)
7. தூரிகை
8. மண்பானை
9. ஆதாரப்பலகை

முழுப்பதிப்புரிமையுடையது | All Rights Reserved

மாகாணக்கல்வித் திணைக்களம் - வடக்கு மாகாணம்
Provincial Department of Education, Northern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர) மூன்றாந் தவணைப் பரீட்சை -2026 யூலை
General Certificate of Education (Adv. Level) 3rd Term Exam – 2026 July

சித்திரக்கலை - I Art	Grade 12	51	T	III	மூன்று மணித்தியாலம் 10 நிமிடங்கள்

❖ **அறிவுறுத்தல்கள்**

- உமது **சுட்டெண்ணையும்** தெரிவுசெய்த **வினாவின்** இலக்கத்தையும் சித்திரம் வரையும் தாளின் மறுபக்கத்தில் தெளிவாக எழுதுக.
- நீர் வர்ணம், போஸ்ரர் வர்ணம், தூள் வர்ணம், பஸ்ரல் வர்ணம் போன்ற வர்ண ஊடகம் ஒன்றையோ அல்லது ஊடகங்கள் சிலவற்றைக் கலந்தோ பயன்படுத்திக் கொள்ளமுடியும்.
- சித்தரத்தைக் கையளிக்கும்போது அது முழுமையாக உலர்ந்திருத்தல் முக்கியமாகும்.

- பின்வரும் **அ, ஆ, இ** ஆகிய பகுதிகளிலிருந்து **ஒரு** தலைப்பை **மாத்திரம்** தெரிவுசெய்து, வர்ணச் சித்திரம் **ஒன்றை** வரைக.

பகுதி – அ : சித்திர ஒழுங்கமைப்பு

1. தாவரங்கள் காணப்படும் குளக்கரை ஒன்றிற்கு வந்துள்ள விலங்குகளைப் பார்வையிடும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்
2. நீண்ட விடுமுறைக்கு முன்னதாகக் காணப்படும் சனநெரிசல் மிக்க புகையிரத மேடை அல்லது பஸ்தரிப்பு நிலையம்
3. மீனவப் படகொன்று கடற்கரையை வந்தடைந்த சந்தர்ப்பம்
4. மத வழிபாட்டுத்தலமொன்றைத் தரிசிக்க வருகை தந்திருக்கும் பக்தர்கள்

பகுதி – ஆ : அலங்கார ஆக்கம்

5. புடவை அச்சிடலுக்குப் பயன்படுத்தத் தக்க பரவல் அலங்காரம் ஒன்றின் 9"x 9" அளவுப் பகுதியொன்றை பிராணிகளின் அரூப வடிவங்களைப் பயன்படுத்தி நிர்மாணிக்குக.
6. 6"x 4" அளவிலான கட்டில் விரிப்பொன்றிற்கான முழுத்தள அலங்காரமொன்றை விரும்பிய வடிவங்களைக் கொண்டு நிர்மாணிக்குக. சுற்றிவர ஒரு அடி நீளமான பகுதியொன்று கீழ் நோக்கிய வண்ணம் இருப்பதாக நினைத்து அளவிடைக்குப் பொருத்தமாகத் திட்டமிட்டு வர்ணம் தீட்டுக.
7. வரவேற்பறைக்குப் பொருத்தமான நவீன பாணியிலான 8 x 6 அடி அளவுப்பிரமானமுடைய சுவர்ச் செதுக்கலொன்றை நிர்மாணிக்குக.

பகுதி – இ : கிறபிக் சித்திர ஆக்கம்

8. பெண்களின் தலைமுடிக்குப் பயன்படுத்தும் உள்நாட்டு மூலிகைகள் கலந்து தயாரிக்கப்படும் எண்ணெய்ப் போத்தல் ஒன்றை, சர்வதேச சந்தைக்குப் பொருத்தமான விதத்தில் பொதியிடுவதற்கான பெட்டியொன்றைத் திட்டமிட்டு வர்ணமிடுக.
9. "நான் கண்ட டாவின்சி" என்ற பெயரில் எழுதப்பட்ட நூலொன்றுக்குப் பொருத்தமான முகப்பட்டையொன்றை நிர்மாணிக்குக. (புத்தகத்தின் முகப்புப்பகுதி, தடிப்பானபகுதி, பின்புறப்பகுதி என்பன காட்டப்படல் வேண்டும்)
10. "போதை வாழ்வை அழிக்கும்" என்ற தலைப்பில் அழகிய வர்ணங்களினாலான சுவரொட்டி ஒன்றை நிர்மாணிக்குக.

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library